| எண் | வாக்கியங்கள் | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|---|
| 1. | மாடு பாலைத் தரும். | மாடு | தரும் | பால் |
| 2. | வள்ளி நடனம் ஆடுகிறாள். | | | |
| 3. | சிங்கம் மானை விரட்டியது. | | | |
| 4. | நான் ஆசிரியரைப் பார்த்தேன். | | | |
| 5. | குமரன் கணினி வாங்கினான். | | | |
| 6. | சுமதி பரிசு பெற்றாள். | | | |
| 7. | மாதவி பாடம் படிக்கிறாள். | | | |
| 8. | குரங்கு வேடிக்கை காட்டியது. | | | |
| 9. | வாழை மரம் குலை தள்ளியது. | | | |
| 10. | குருவிகள் கூட்டுக்குள் சென்றன. | | | |

Scanned with CamScanner

**11. கீழே உள்ள வாக்கியங்களிலிருந்து பெயர்ச்சொல்லை எடுத்து எழுதுக:**

**விடைகள்**

1. நரி ஒன்று தாகத்தால் தவித்தது. ..................................
2. கிணற்றின் அருகே சென்றது. ..................................
3. ஓநாய் ஒன்று வந்தது. ..................................
4. வாளி மேலே வந்தது. ..................................
5. குரங்கு காட்டை நோக்கிச் சென்றது. ..................................
6. ஆடிக் குதிக்கும் போது சட்டை கிளையில் மாட்டியது. ..................................
7. சூரியன் உதித்ததும் தெரியவில்லை. ..................................
8. நகரத்திற்குச் சென்றிருந்த நம்பி ஊருக்குள் வந்தார். ..................................
9. வெள்ளை நிறத்தில் ஒரு பூனை. ..................................
10. தூங்குவதற்கு மாத்திரை கொடுத்தேன். ..................................

Scanned with CamScanner

**12. கீழே உள்ள பகுதியிலுள்ள பெயர்ச்சொற்களைக் கோடிட்டுக் காட்டி வார்த்தையை எடுத்து எழுதுக:**

பூக்கடை ஓரத்துக் குப்பைக் குவியல்களில் கிழிந்த சட்டையுடன், நாலைந்து சிறுவர்கள் எதையோ தேடிக் கொண்டிருந்தனர். சாக்கடை ஓரமாகத் தெரு நாய் ஒன்று படுத்திருந்தது. பேருந்து ஒன்றைக் கூடக் காணவில்லை. கட்டை வண்டிகள் அங்குமிங்குமாகக் கிடந்தன. தார்ப்பாய் மூடிய சரக்கு வண்டி ஒன்று வேகமாகப் போயிற்று. 'குப்'பென்று புழுதி புகையாக எங்கும் பரவியது. நான் கண்களைக் கசக்கிக் கொண்டேன்.

**விடைகள்:**

| | |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |



Scanned with CamScanner